விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 218 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 09 வெள்ளிக்கிழமை (25.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





# ஆதி முதல் அறிந்தவர்




40 வருடங்கள் உங்கள் வாழ்வில் பணப்பரிவர்த்தனைகளோடு இணைந்திருக்கும் நாம்
நீங்கள் ஆதி முதல் அறிந்த - உங்களை ஆதி முதல் அறிந்த
RDB வங்கி ஆதி முதல் அறிந்தவர்

RDB வங்கி
Empowering Sri Lankans
www.rdb.lk | HOTLINE 0112 42 52 62

பிரதேச அபிவிருத்தி வங்கி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையிலான சான்றளிக்கப்பட்ட விஷேட வங்கி | "BBB+" Stable (LRA)

(C-218)


நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்குத் தேவையான வேலைத்திட்டங்களை காலங்கடத்தாது உடன் முன்னெடுங்கள்

## அரசாங்கத்துக்கு நாமல் எம்.பி அட்வைஸ்

(கொழும்பு)

மக்கள் வழங்கிய ஆணையை மறந்து விட்டு காலத்தை வீணடிப்பதை விடுத்து நாட்டுக்குத் தேவையான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள பொது ஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை (24) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டு மக்களுக்காக சேவையாற்றக்கூடிய அரசியல் சக்தியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் உருவெடுக்கும். தற்போது தொகுதிகளுக்கும் புதிய அமைப்பாளர்களை நியமித்திருக்கின்றோம்.

ஜே.வி.பி.க்கு போட்டி வேறு கட்சி இல்லை என்றாலும், அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளே அவர்களுக்கு போட்டியாகும்.

தாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய் என அவர்களே தற்போது நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர். இதுவே அவர்களுக்கு சவாலாக அமையும். ஏனையோர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து காலத்தை வீணடித்துக் கொண்டிருப்பதை விட மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டும்.

இந்த அரசாங்கத்துக்கு மக்கள் எதற்காக ஆணையை வழங்கினர் என்பதை அவர்கள் மறந்து விட்டனர்.

எனவே முதலில் அதனை நினைவில் கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். கல்வி மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

ஆனால் வரலாறு பாடம் நீக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஜே.வி.பி.யின் விருப்பத்துக்கமைய கல்வித்துறையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. உலக போக்கிற்கமையவே கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றார். (ம-7)

# யாழ்ப்பாண நூலக எரிப்புக்கு ரணிலும் மந்திராலோசனை

## சபையில் அமைச்சர் பிமல் பகிரங்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் நூலகத்தை எரித்த மற்றும் கறுப்பு ஜூலையை உருவாக்கிய அமைச்சரவையில் இருந்தவர்களில் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர் என பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (24) இதுகுறித்து அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பில் கதைக்கும்போது வெள்ளைப் பத்திரிகை தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அந்தப் பெயரை கூறும் போதே எமக்கு பயம் வருகின்றது. 1981இல் ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டுவரப்பட்ட வெள்ளைப் பத்திரிகையின் நோக்கம் முழுமையாகக் கருமையானது.

அந்த வெள்ளைப் பத்திரிகை மூலம் கறுப்பு வேலைத்திட்டங்களைக் கொண்டு வந்த ரணில் போன்றோரே யாழ்ப்பாணம் நூலகத்திற்கு தீ வைத்தனர். கறுப்பு ஜூலையையும் ஏற்படுத்தினர் என்றார். (ம-7)

# மாணவன் பிரசோதனுக்கு இன்று கௌரவிப்பு




2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்த யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் செல்வன் பரமேஸ்வரன் பிரசோதன் யப்பானில் நடைபெற்ற ஆசியபசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

அந்த மாணவனுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று முற்பகல் 11.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபர் திருமதி லதாநந்தினி சிவபாதம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் கலந்து கொள்வார். (ந)

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 - 09 - 1963



இறப்பு 08 - 07 - 2025

## கிருஷ்ணபிள்ளை சிவகுமார்

விக்னேஸ்வரக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் முற்காலம் கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும், தற்காலம் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை சிவகுமார் அவர்கள் கடந்த 08.07.2025 செவ்வாய்க்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - தெய்வானை தம்பதிகளின் மகனும் இயன் ஜேக்கப் - எசுத்தர் ஜேக்கப் தம்பதியரின் மருமகனும் ஜெயரஞ்சி அவர்களின் அன்புக் கணவரும், ஜேன் விமல் அவர்களின் பாசமிகு தந்தையும் ரவிகுமார், உமாதேவி, விஜயகுமார், அமரர் ராஜ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மேரி சாமுவேல் (லண்டன்), காலஞ்சென்றவர்களான பாஸ்டர் ராஜன் ஜேக்கப், பாஸ்டர் அல்பிரட் ஜேக்கப் மற்றும் சோதி தர்மலிங்கம் (அவுஸ்திரேலியா), பாஸ்டர் செல்வராஜ் ஜேக்கப், ஜெகன் ஜேக்கப், ஜெனி ஜேக்கப் (கட்டார்), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2025) வெள்ளிக்கிழமை அவுஸ்திரேலியா நேரம் பி.ப 03.00 மணியளவில் 186 Hartley, Smeaton Grange NSW 2567 Sydney, Australiaவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(C-3498)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## அப்பாத்துரை செல்வரத்தினம்

தோற்றம் 13.09.1955

மறைவு 23.07.2025

உடல் நலக் குறைவு காரணமாக
23.07.2025 புதன்கிழமை அன்று
அமரத்துவமடைந்த அமரர்
**அப்பாத்துரை செல்வரத்தினம்**
அவர்களின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்பதுடன் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
இரங்கலையும்
அனுதாபத்தினையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:- திருமதி சங்கரப்பிள்ளை
சடைப்பிள்ளை
(கைதடி கிழக்கு, கைதடி)
நா.சங்கர் குடும்பம் - சுவிஸ்

(4886)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 218 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 09 வெள்ளிக்கிழமை (25.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## எமது அப்பாவை விடுதலை செய்யுங்கள்

ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் அநுர அரசிடம் கோரிக்கை



15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு பனிக்கன்குளத்தில் கிணற்றிலிருந்து தாயும் இரண்டு பிள்ளைகளும் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் அரச வீட்டுத் திட்டப் பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து இளம் தாயும் அவரது இரண்டு பிள்ளைகளும் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இதில் பனிக்கன்குளம் கிராமத்தைச் சேர்ந்த உசாகரன் மாலினி (வயது-38), உசாகரன் மிக்சா (வயது-11), உசாகரன் சதுசா (வயது-4) ஆகியோரது சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கிணற்றுக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் தண்ணீர் கான், கைப்பை உள்ளிட்ட பொருட்களுடன் காணப்பட்டதை அவதானித்த ஊர்



16ஆம் பக்கம் பார்க்க

# அரசியல் கைதிகளை உடன் விடுவியுங்கள்

## நல்லூரில் நேற்று கவனயீர்ப்பு



நீண்ட காலமாக சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நல்லூரில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணிப் புதைகுழியில் கண்ணாடிப் போத்தல், இரும்புத் துகள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் கண்ணாடிப் போத்தல் மற்றும் இரும்புத் துகள்கள் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியின் 2ஆம் கட்டத்தின் 19ஆவது நாள் அகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

## ரோபோக்கள்போல் வளர்க்கப்படும் பிள்ளைகள்

– அநுர குமார



(கொழும்பு)

ரோபோக்கள் போல வளர்க்கப்படும் பிள்ளைகளின் தலைமுறையை

16ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியில் 3 எலும்புக்கூட்டுத் தொகுதி நேற்று அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் 3 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் 19ஆம் நாள் அகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற்பார்வையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ குழுவினர்,

15ஆம் பக்கம் பார்க்க

## தாவடியில் கத்தியால் குத்தி ஒருவர் படுகொலை

சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

தாவடி மதுபானக் கடைக்கு அருகில் இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சுதுமலை மத்தி மானிப்பாயைச் சேர்ந்த நே.சர்வேந்திரன் (வயது-45) என்பவரே உயிரிழந்தவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க

## ஒரு பில்லியன் டொலர் இழப்பீடு வழங்குங்கள்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனத்துக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இலங்கையின் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளானதால் ஏற்பட்ட கடல் சூழல், பொருளாதார இழப்பிற்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு

15ஆம் பக்கம் பார்க்க

## பொன்னாலையில் கஞ்சாவுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலையில் கஞ்சாவுடன் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடையவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடியில் கடை ஒன்றினை உடைத்து 6 இலட்சம் ரூபாய் காசு, கமரா சேமிப்பகம் என்பவற்றை திருடியமை, யாழில் கருவாட்டுக் கடை

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமடையும் சிக்குன்குனியா!

## எச்சரிக்கும் உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனீவா)........................................

**இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் சர்வதேச ரீதியில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திய சிக்குன்குனியா வைரஸ் மீண்டும் பரவும் சாத்தியம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.**

இந்த வைரசால் காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, மற்றும் நீண்ட கால இயலாமை ஏற்படும் அபாயம் இருப்பதாகவும், வைரஸ் பரவலை கட்டுப்படுத்த உடனடி தடுப்பு நடவடிக்கைகள் அவசியம் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து உலக சுகாதார ஸ்தாபனத்தின் அதிகாரி டயானா ரோஜாஸ் அல்வாரெஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

'சுமார் 56 நாடுகளில், 119 பில்லியன் மக்கள் சிக்குன்குனியா தொற்று ஏற்படும் அபாயமுள்ள பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.'

தற்போது மடகாஸ்கர், சோமாலியா, கென்யா ஆகிய நாடுகளில் சிக்குன்குனியா பரவத் தொடங்கியுள்ளது. இந்தியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளிலும் அதிகளவான பாதிப்புக்களும் பதிவாகியுள்ளன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிக்குன்குனியா பரவல் தொடருமானால், அது உலகளாவிய சுகாதாரத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறும் என்பதால், அனைத்து நாடுகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

2000ஆம் ஆண்டு முதல் பரவத் தொடங்கிய சிக்குன்குனியா வைரஸ், கடந்த காலத்தில் உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில் மீண்டும் அதே அளவிலான அபாயம் உருவாகும் சாத்தியம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கிருத்திக் ரோஷன் இலங்கை விஜயம்

(கொழும்பு)

பொலிவுட் சூப்பர் ஸ்டார் கிருத்திக் ரோசன் இலங்கை வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிட்டி ஓப் ட்ரீம்ஸ் விருந்தகத்தின் பிரமாண்ட திறப்பு விழாவுக்காக பொலிவுட் சூப்பர் ஸ்டார் கிருத்திக் ரோசன் இலங்கைக்கு வருகை தர உள்ளார்.

2025 ஒகஸ்ட் 2 ஆம் திகதியன்று குறித்த திறப்பு விழா இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த நிகழ்வில் சாருக்கான் பங்கேற்கவிருந்த நிலையில் அவரின் பயணம் இரத்துச் செய்யப்பட்டது.

இதனையடுத்தே பொலிவுட் சூப்பர் ஸ்டார் கிருத்திக் ரோசன் குறித்த நிகழ்வுக்காக இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. (நி)



இலங்கை தொல்லியல் திணைக்களத்தின் 135 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தொல்லியல் தின விழா யாழ் கோட்டையில் தொல்லியல் திணைக்கள யாழ் கோட்டை பொறுப்பு அதிகாரி கபிலன் தலைமையில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)



பேராசிரியர் வைத்திய நிபுணர் தவம் தம்பிப்பிள்ளையினால் யாழ்.போதனா வைத்தியசாலை Vasclar Surgery Unit மற்றும் Interventional Radiology Unit ஆகியவற்றிற்கு பல லட்சம் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் கையளிக்கப்பட்டது. (படம்-சிவசாந்தன்)



ஆடி அமாவாசை பிதிர்க்கடன் நிறைவேற்றும் புனித வழிபாடுகள் கீரிமலை கண்டகி தீர்த்தக்கரையில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்றது. தந்தையை இழந்தவர்கள் பிதிர்க்கடன் செலுத்தும் விரதமான ஆடி அமாவாசை விரதத்தினை முன்னிட்டு, தமது பிதிர்க்கடன்களை செலுத்தி கடலில் நீராடினார்கள். (படங்கள்-சிவசாந்தன்)



போசணை மாதத்தை முன்னிட்டு "ஆரோக்கியமான உணவு எமது உரிமை" என்ற தொனிப்பொருளில் கண்டாவளை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு கண்காட்சி பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் பங்களிப்புடன் குறித்த கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது. குறித்த கண்காட்சியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர். (படம்-தேவானந்தன்)



காரைநகர் நம்பாலை கிராமத்தில் வைத்தியர்களை உருவாக்கிய அன்னையர்களுக்கான கௌரவிப்பு நேற்று முன்தினம் புதன் கிழமை ஓய்வுநிலை வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி சி.ரகுராம், சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் வி.எஸ்.சிவகரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதுள்ள கல்வி முறை

# திருப்திகரமானதாக இல்லை!

## கல்வி மறுசீரமைப்பு அவசியம் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

**எந்தவொரு மாணவரும் பாடசாலை கல்வியிலிருந்து இடை விலகக்கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டு புதிய கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றில் நேற்று அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள கல்வி முறைமையின் ஊடாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து திருப்தி அடைய முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே, தற்போது முழுமையான கல்வி மறுசீரமைப்பு அவசியமாகவுள்ளது.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் கருத்துரைக்கின்ற போதும் பலரும் பாடங்கள் குறித்து மாத்திரம் கவனம் செலுத்துகின்றனர்.

எனினும் சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் புதிய கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தற்போது பல சந்தர்ப்பங்களில் உயர்கல்வி முறைமை தொடர்பில் மாத்திரமே கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் தற்போது பாடசாலை கல்வியில் பாரிய பிரச்சினைகள் உள்ளன.

இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான மனித வளம் உள்ளது அதனை உரிய முறையில் பயன்படுத்திச் சிறந்த கல்வியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அதேநேரம், பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாக கூறப்படுகின்ற நிலையில் மறுபுறம் மிகவும் குறைந்த மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளும் இயங்குகின்றன.

இதன்படி, 10 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கையை கொண்ட 115 பாடசாலைகள் நாட்டில் இயங்குவதாகவும் 20 இற்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையை கொண்ட 406 பாடசாலைகள் இயங்குவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, மாணவர்கள் தங்களது சமூகத்திலிருந்து வெளியேறி முன்னோக்கி பயணிக்கும் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர். மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**
No.139, Main Street Jaffna.
யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்) (4826)



## அந்தியேட்டி கிரியையும் நன்றி நவில்லலும்

மண்ணில் 24 - 06 - 1946



விண்ணில் 13 - 07 - 2025

கடந்த 13.07.2025 அன்று சிவபதம் அடைந்த

அமரர்.திருமதி **தங்கேஸ்வரி இராஜதுரை** அவர்களின்

இறுதிக்கிரியைகளுக்கு வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி, முகப்புத்தகம் வாயிலாக துயர் பகிர்ந்தவர்களுக்கும், மலர்மாலைகள், மலர்வளையங்கள் வழங்கி அஞ்சலி செய்தவர்களுக்கும் அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் விசேடமாக Northern Central Hospital Prof. சுகந்தன் அவர்களுக்கும் தாதியர் மற்றும் உதவியாளர்களுக்கும் மக்கள் வங்கி ஓய்வூதியச் சங்க அங்கத்தவர்களுக்கும் இன்றுவரை எமது இழப்பில் பங்கெடுத்துள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 10.08.2025 அன்று காலை 8.00 மணி அளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 12.08.2025 அன்று காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் தொடர்ந்து காலை 11.00 மணியளவில் சுதுமலை குபேரமஹால் மண்டபத்தில் (சுதுமலை அம்பாள் கோவில் அருகில்) நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

077 724 6352 (4881)

இங்ஙனம்: கணவர், பிள்ளைகள்



# இராசிபலன்

25.07.2025
ஆடி 09, வெள்ளிக்கிழமை
பிரதமை பின்னிரவு 12.59 மணிவரை


பூசம் பிற்பகல் 6.00 மணிவரை
சுப நேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

சந்திராஷ்டமம்: மூலம், பூராடம்


வளவன்





பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.





தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள்.





ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்ப்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.




உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.




திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல் அகலும், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.




உறவினர் வழியில் சுப செய்திகளில் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய நட்புக்கள் இடம்பெறலாம், பொன்னான நாள்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், கொடுக் கல் வாங்கல்களில் கவனம் தேவை, ரோக பயமுண்டு.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

தூங்கும்முன் சிலநிமிடம் இறைவனைத் தொழு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குத்துச்சண்டை போட்டியில்
## மாகாண சம்பியனாகியது வவுனியா அணி



2025 ஆம் ஆண்டுக்கான வட மாகாண விளையாட்டுப் போட்டியின் குத்துச் சண்டை போட்டியில் வவுனியா ஆண்கள் அணி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வடமாகாண குத்துச் சண்டை போட்டியானது முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் இடம் பெற்றது.

இதன் போது வவுனியா மாவட்ட ஆண்கள் அணியினர் 7 தங்கப் பதக்கங்களையும் 2 வெள்ளி பதக்கங்களையும் 3 வெண் கலப் பதக்கங்களையும் பெற்று வட மாகாணத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டம் சார்பாக பங்கு பற்றிய பெண்கள் அணியினர் 5 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று மூன் றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 350 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 500 | 280 | 350 |
| தக்காளி | 200 | 200 | 200 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 350 | 350 | 300 | 300 | 250 |
| கோவா | 300 | 400 | 400 | 250 | 400 |
| கரட் | 400 | 450 | 500 | 350 | 500 |
| பூசணி | 100 | 120 | 150 | 120 | 150 |
| புடோல் | 100 | 100 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 250-350 | 400 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 110 | 140 |
| பாகற்காய் | 600 | 600 | 450 | 600 | 500 |
| வெண்டக்காய் | 150 | 150 | 150 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 800 | 1200 | 1000 | 1000 | 500 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 230 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 120 | 200 |
| கறிமிளகாய் | 600 | 650 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 500 | 300 | 400 |
| போஞ்சி | 600 | 650 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 250 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80-140 | 150 | 60 | 150 |
| தேசிக்காய் | 250 | 200 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 150 | 80-140 | 140-180 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | -- | 200 |

## மாகாண உடற்பயிற்சி போட்டியில் அந்தோனியார் கல்லூரி சம்பியன்




வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அபாரமான திறமையை வெளிப்படுத்தி சம்பியனாகியது. இப்போட்டியில் இரண்டாம் இடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மூன்றாம் இடத்தை வசாவிளான் மத்திய கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டனர்.

பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி அணி தேசிய மட்டத்தில் தொடர்ச்சியாக சாதித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (3-104)


# மணிவிழா வாழ்த்தும்
# சேவை நலன் பாராட்டும்



இன்றைய தினம் (25.07.2025)
மணிவிழா கொண்டாடும்
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய
ஆசிரியை
**திருமதி. அனந்தரூபி ஆனந்தராஜா**
அவர்கள் ஆசிரியர் சேவையில் 28 வருடங்கள்
சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும்
அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவர்களது
ஓய்வுக்காலம் சிறப்பாகவும் ஆரோக்கியமானதாகவும்
பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்
- யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் - 01.07.1997 - 20.01.1999
- கோப்பாய் ஆசிரிய கலாசாலை - 21.01.1999 - 31.12.2000
- யா/புனித அந்தோனியார் கல்லூரி - 01.01.2001 - 01.05.2001
- யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் - 02.05.2001 - 04.01.2007
- யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம் -05.01.2007 - 04.02.2014
- யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம் -05.02.2015 - 17.09.2023
- யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்- 18.09.2023-24.07.2025

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.


## இந்தியா- இங்கிலாந்து டெஸ்டில் இடை நடுவே வெளியேறிய ரிஷப்



மென்செஸ்டர், ஓல்ட் ட்ரஃபர்ட் விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் புதன்கிழமை ஆரம்பமான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியபோது ரிஷப் பண்ட் உபாதைக்குள்ளானதால் தற்காலிக ஓய்வு பெற்றார்.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்தியா, முதலாம் நாளான புதன்கிழமை ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்களை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

திறமையாகத் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த ரிஷப் பண்ட் 37 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கிறிஸ் வோக்ஸின் வேகப்பந்தை ரிவர்ஸ் ஸ்வீப் முறையில் அடிக்க முயற்சித்தபோது பந்து அவரது துடுப்பை உராய்தவாறு அவரது வலது பாதத்தைப் பதம்பார்த்தது.

இதனை அடுத்து கடும் வேதனையினால் அவதியுற்ற ரிஷப் பண்ட்டுக்கு அவசர முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது பாதத்தில் பந்து பட்ட இடத்தில் கோல்வ் பந்தைப் போன்று வீக்கம் ஏற்பட்டதுடன் இரத்தமும் கசிந்ததைக் காணமுடிந்தது.அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அவரால் வலது காலை ஊன்ற முடியாமல் போனதுடன் அவர் கடும் அவதிக்குள்ளானார். இதனைத் தொடர்ந்து மருத்துவ ஊர்தியில் ரிஷப் பண்டை உதவியாளர்கள் ஏற்றிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழிக்கு எதிராக

## சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

### நடிகர் கருணாஸ் வேண்டுகோள்



**(கொழும்பு)**

**செம்மணி மனிதப் புதைகுழியானது தமிழினப் படுகொலையின் சாட்சியாகும். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், செம்மணி புதைகுழிக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என தென்னிந்திய பிரபல நடிகரும் முக்குலத்தோர் புலிப்படை கட்சியின் தலைவருமான சேது கருணாஸ் தெரிவித்துள்ளார்.**

செம்மணி மனிதப் புதைகுழி 2009 ஆம் ஆண்டிற்கு முன் நிகழ்ந்திருக்கலாம் அல்லது பின் நிகழ்ந்திருக்கலாம். எப்போது நடந்தாலும், சிங்களவரால் நிகழ்த்தப்பட்டது இனப் படுகொலைதான் என்பதை செம்மணியும் மற்ற அகழ்வாய்வுகளும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

தாயும் குழந்தையும் கட்டி அணைத்தபடி மடிந்த எலும்புக் கூடுகளின் காட்சி, காலம் கடந்தும் நம் காயங்களை மீண்டும் காயப்படுத்துகிறது. பள்ளிச் சிறுவர்களின் புத்தகப் பை, பொம்மையோடு கண்டறிந்த அகழாய்வு கொடுமையின் உச்சத்தை தொடுகிறது. எண்ணிலடங்கா எலும்புக்கூடுகளில் சிறுவர் சிறுமியர் அதிகம் என்பதை உலகம் கண்டுணரா அதிர்ச்சி.

வதைக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் வல்லுறவில் மறைக்கப்பட்டும் எத்தனைப் பெண்கள்! அத்தனையும் செம்மணியில் எலும்புக்கூட்டின் சாட்சியங்கள். இன்னும் இலங்கை அகழாய்வு நீண்டாலும் கள்ள மௌனம் சாதிக்கும் இவ்வுலகம்.

நாம் சிங்கள பௌத்த பேரினத்தின் அநீதிகளை பன்னாட்டு அவையில் எடுத்துரைப்போம். மக்கள் திரள் போராட்டம் வழியாய் நமக்கான நீதிக்குக் குரல் கொடுப்போம்.

ஒன்றிய அரசு, அண்டை நாட்டில் நிகழ்ந்த அநீதிக்கு ஐ.நா அவையில் குரல் கொடுக்க வேண்டும்! இதற்கு முன் தமிழினத்திற்கு செய்ததை, செம்மணி மனிதப் புதைகுழியை அறிந்தும் கண்டும் காணாமல் இருக்கக்கூடாது.

தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் செம்மணி மனிதப் புதைகுழி படுகொலைக்கு, சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, இலங்கை அரசை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

செம்மணி நமது தமிழினப் படுகொலைக்கு சாட்சியத்திற்கு அடையாளம். ஆனாலும், இன்னும் இதுபோன்ற தோண்டப்படாத அகழாய்வுகள் இன்னும் எத்தனையோ உள்ளன. காலம் ஈழத் தமிழனத்திற்கு நல்ல தீர்ப்புகள் வழங்கும். நாம் தொடர்ந்து போராடுவோம் என குறிப்பிட்டுள்ளார். (நி)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில்-மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.35 மணிமுதல் 9.18 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.05 மணிமுதல் 10.05 மணி வரையுள்ள சுபவேளையில் கிரியைகள் ஆரம்பமாகி 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணி முதல் 27 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. அத்துடன் மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெறவுள்ளதென ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார்.(3)

## கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் புனரமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றின் ஆளுகைக்குட்பட்ட கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தின் புனரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ், உப தவிசாளர் ஞா.கிஷோர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு புனரமைப்பு பணிகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-30)


# சேவைநலன் பாராட்டு




யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர்

உயர்திரு.

**கந்தையா புஸ்பராஜா**

(B.A, PGDE, MEd)

ஆரம்பக்கல்வி - யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்
இடைநிலைக்கல்வி - யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
உயர்தரக்கல்வி - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

சேவைக்கால விபரம்

- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி (17.08.1988 - 11.01.2009 - ஆசிரியர்)
- யா/நாவாந்துறை றோ.க வித்தியாலயம் (12.01.2009 - 08.12.2010 - ஆசிரியர்)
- யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் (09.12.2010 - 17.12.2023 - அதிபர்)

(C-3497)

அறிவும் ஆற்றலும் ஆளுமைத் திறனும்
நறியவே நாளுந்தழைக்கும் பண்பும்
அறிவால் ஆய்ந்து அரும்பணி செய்தீர்
நெறியோர் வாழ்த்த நீடூழி வாழ்க

ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்தும்:

ஆசிரியர் நலன்புரிச்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# மிகப்பெரிய தங்கச் சுரங்கம் சீனாவில் கண்டுபிடிப்பு!

(பீஜிங்)

சீனாவின் ஹுனான் மாகாணத்தில் மிகப்பெரிய தங்கச் சுரங்கம் கண்டு பிடிக்கபட்டுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதனைத் தற்போது சீனா உறுதி செய்துள்ள நிலையில் அங்கு 1,000 தொன் எடை கொண்ட தங்கம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தங்கம் என்பது டிஜிற்றல் மொடலிங் தொழில்நுட்பத்தின் அடிப் படையில் பூமிக்கடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹுனானில் ஏற்க னவே இருக்கும் வாங்க் தங்க சுரங்கத்திற்கு அருகே இது அமைந்துள்ளது.


இந்தத் தங்கப் புதை யலின் மொத்த மதிப்பு 83 பில்லியன் அமெரிக்க டொலர் என்று தெரிவிக் கப்படுவதுடன் அதுமட்டு மின்றி இது உலகின் மிகப் பெரிய தங்கச் சுரங்கமெ னவும் தெரிவிக்கப்படுகின் றது.

தென்னாபிரிக்காவின் தெற்கு சுரங்கத்தில் 930 தொன் தங்கம் இருப்பதாக கண்டறியப்பட்ட நிலையில் இது அதனைவிட பெரியது என்பதை சீனா உறுதி செய்துள்ளது.

சீனா ஏற்கனவே உல கின் முன்னணி தங்கம் உற்பத்தி செய்யும் நாடாக உள்ள நிலையில், முதற் கட்ட ஆய்வின்படி ஒரு தொன் தாதுவில் 138 கிராம் வரை தங்கம் கிடைக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சீனாவின் இந்தத் தங்க புதையல் குறித்து பல நாடு கள் ஆச்சரியமாகப் பார்க் கும் நிலையில் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் சந்தேகக் கண்ணோடு பார்க்கின்றன.

ஒரே இடத்தில் 1,000 தொன் தங்கம் கிடைப்பது சாத்தியமில்லை எனவும் சீனா இந்த விடயத்தில் பொய் சொல்லலாம் என றும் அமெரிக்கா தரப்பில் சந்தேகம் எழுப்பப்பட்டுள் ளதும் குறிப்பிடத்தக்கது. (நி)



# சர்ச்சைக்குரிய சட்டமூலம்; எதிர்த்து உக்ரைனில் ஆர்ப்பாட்டம்




(கீவ்)

உக்ரைனின் ஊழல் எதிர்ப்பு அமைப்புகளின் சுதந்திரத்தை பலவீனப் படுத்துவதாக விமர்சகர்கள் கூறும் ஒரு சட்டமூலத்தில் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கையெழுத் திட்டுள்ளார்.

இது நாட்டின் பல நக ரங்களில் போராட்டங்க ளைத் தூண்டியது மற்றும் சர்வதேச விமர்சனங்க ளைப் பெற்றது.

புதிய சட்டம் தேசிய ஊழல் தடுப்புப் பணியகம் மற்றும் சிறப்பு ஊழல் தடுப்பு சட்டத்தரணிகள் அலுவலகம் ஆகியவற் றின் அதிகாரத்தை கட்டுப்ப டுத்துகிறது.

மேலும் இது அவர்க ளின் அதிகாரத்தைக் குறை மதிப்பிற்கு உட்படுத் துவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

2022 பெப்ரவரியில் ரஷ்யாவின் முழு அள விலான படையெடுப்பு தொடங்கிய பின்னர் மிகப் பெரிய போராட்டத்துக்கும் சட்டம் வழிவகுத்தது.

சட்டம் நிறைவேற்றப் பட்ட பின்னர் மிகப்பெரிய அரசாங்க எதிர்ப்பு போராட்டத்திற்காக நூற் றுக்கணக்கான மக்கள் கீவில் கூடினர். (நி)

# வெப்பம் தொடர்பான இறப்புகள் இந்தியாவில் இரட்டிப்பாகும்

(வோஷிங்டன்)

2050 ஆம் ஆண்டுக் குள் இந்தியாவில் வெப்பம் தொடர்பான இறப்புகள் இரட்டிப்பாகும் என உலக வங்கி எச்சரிக்கை விடுத் துள்ளது.

இதன்படி, ஒரு ஆண் டுக்கு 144,000இல் இரு ந்து 328,500 ஆக இறப் புகள் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதனிடையே, டில்லி, சென்னை, சூரத், லக்னோ உள்ளிட்ட நகரங்கள் அதிக வெப்ப அலை மற் றும் வெள்ள அபாயத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் உலக வங்கி வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

எனினும், இதனைத் தடுப்பதற்கு 2050 ஆம் ஆண்டுக்குள் வலுவான உட்கட்டமைப்பை உரு வாக்க வேண்டும் என வும், இதற்கு 2.4 டிரில்லி யன் டொலர் முதலீடு தேவைப்படும் எனவும் உலக வங்கி அறிவித்துள் ளது.

இந்தியாவில் மழை வெள்ளத்தால் ஆண்டுக்கு சுமார் 4 பில்லியன் டொலர் பொருளாதார இழப்பு ஏற்படுவதாகவும், இது 2070ஆம் ஆண் டுக்குள் 14 முதல் 30 பில் லியன் டொலராக அதிகரிக் கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (நி)



# விபத்தி...
# 5 குழந்...

## ரஷ்யாவில்...

(மொஸ்... ரஷ்யாவ... பயணிகள் வி... குள்ளாகிய... பயணித்த ... துள்ளதாக... தெரிவித்துள்...

ரஷ்யாவின் கிழக்குப் பகு தியில் அமைந்துள்ள அமூர் மாகாணம் அருகே திண்டா நகரத்தை நோக்கிச் சென்ற ...

## பட்டினியால் அதிகரிக்கு... இஸ்ரேலுக்கு வலுக்...

(ஜெருசலேம்)

காசாவில் பட்டினியை இனப் படுகொலை ஆயுதமாகப் பயன் படுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகள் இஸ்ரேலை கண்டித்துள்ளன.

காசாவில் கடந்த இரண்டு நாட்களில் 33 பேர் பட்டினி யால் இறந்துள்ளனர். அவர் களில் 12 பேர் குழந்தைகள். இதன் மூலம் சமீபத்திய நாட் களில் பட்டினியால் இறந்த ... 111 ...

## சீன - ஐரோப்பிய... பீஜிங்கில் ஆர...

(பீஜிங்)

சீனாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையி லான உச்சிமாநாடு பீஜிங்கில் நேற்று வியாழக்கிழமை ஆரம் பமானது.

இதில் தலைவர்கள் வர்த்தக மோதல் முதல் உக்ரைன் ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திற்குள்ளான பயணிகள் விமானம்! ந்தைகள் உட்பட 49 பேர் உயிரிழப்பு!


## வில் துயரச் சம்பவம்

**ாஸ்கோ)**

**பாவில் 49 பேருடன் சென்ற ர விமானம் ஒன்று விபத்துக் கியதில் விமானத்தில் 5 அனைவரும் உயிரிழந் ாக சர்வதேச ஊடகங்கள் துள்ளன.**

பயணிகள் விமானத்தில் 5 குழந்தைகள் மற்றும் 6 பணி யாளர்கள் உட்பட மொத்தம் 49 பேர் பயணம் செய்துள்ளனர்.

இந்நிலையில், இந்த விமானம் திண்டா விமான நிலையத்தை அண்மித்த போது, அங்காரா ஏர்



லைன்ஸ் விமானம் நேரப் படி பிற்பகல் 1 மணிய ளவில் விமானக் கட்டுப் பாட்டு நிலையத்துடனான தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டதுடன் திடீரென ரேடாரிலிருந்து அந்த விமானம் காணா மல் போனதால் விமான நிலைய ஊழியர்கள் உள் ளிட்ட அதிகாரிகள் குழப் பத்தில் இருந்ததாகத் தெரி விக்கப்பட்டது.

இதை அடுத்து குறித்த விமானம் விபத்துக்குள் ளானது உறுதிப்படுத்தப் பட்டதுடன் அன்டோனோவ் An-24 பயணிகள் விமா னத்தில் இருந்த 49 பேரும் உயிரிழந்ததாக அவசரகால அதிகாரிகளை மேற்கோள் காட்டி அரசு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இதேவேளை, விமா னம் ரேடாரில் இருந்து மறைவதற்கு முன்பு ஒரு துயர சமிக்ஞையையும் வெளியிடவில்லை, அல் லது எந்தத் தொழில்நுட்ப சிக்னல்களையும் தெரிவிக் கவில்லை என்று அவசர கால அதிகாரிகள் தெரிவித் தனர்.

இந்நிலையில் குறித்த விமானம் விபத்துக்குள் ளான இடத்தில் மீட்புப் பணிகள் தீவிரமாக இடம் பெற்று வருவதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

---

## க்கும் உயிரிழப்புக்கள்! லுக்கும் எதிர்ப்புகள்!

வர்களின் எண்ணிக்கை 80 குழந்தைகள் உட்பட 101 ஆக உயர்ந்துள்ளது. ஆயிரக்கணக் கானோர் மரணத்தின் விளிம்பில் இருப்பதாகவும் கள நிலவரங்கள் வெளியாகி வருகின்றன.

உணவுக்காகக் காத்திருந்த வர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,054 ஆக உயர்ந் துள்ளது.

காசாவிற்கு அவசர உதவி கோரி 111 உலகளாவிய அமைப்புகள் ஒன்றிணைந்துள்ளன. எல்லைகளற்ற மருத்து வர்கள், ஆக்ஸ்பாம் இன் டர்நேஷனல் மற்றும் பொது மன்னிப்பு சபை போன்ற அமைப்புகள் களத்தில் உள்ளன.

காசாவிற்கு வெளி யேயும் காசாவிற்குள்ளும் கிடங்குகளில் தொன் கணக்கில் உணவு, சுத்த மான நீர், மருந்து மற்றும் எரிபொருள் குவிந்துள் ளன. மனிதாபிமான அமைப்புகள் இவற்றை விநியோகிப்பதை இஸ் ரேல் தடுக்கிறது.

காசா மனிதாபிமான அறக்கட்டளை என்ற பெய ரில் இஸ்ரேல் அமைத்த உணவு விநியோக மையங்களை இஸ்ரேல் மரணப் பொறிகளாக மாற்றுவதாகவும் அந்த அமைப்புகள் குற்றம்சாட் டுகின்றன.



ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கைத் தலைவர் காஜா கல்லாஸ் கூறுகையில், "உணவு தேடி வரும் மக்களை குறிவைப்பது எந்த நியா யமும் இல்லை.

உணவு விநியோக மையங்களில் கொலை கள் நிறுத்தப்பட வேண் டும்" என்று தெரிவித்துள் ளார். மேலும் இஸ்ரேல் பேச்சுவார்த்தைக்கு இணங்கித் தங்கள் வார்த் தையைக் காப்பாற்றவில்லை என்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரித்தார்.

இது தவிர்த்து அண் மையில் பிரிட்டன் மற்றும் கனடா உட்பட 29 நாடு களின் வெளியுறவு அமைச்சர்கள் படுகொ லையை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரே லுக்குக் கடிதம் எழுதி உள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

---

## பிய உச்சிமாநாடு ஆரம்பமானது


போர் வரையிலான பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தவுள்ளனர்.

பல வாரங்களாக அதிகரித்து வரும் வர்த்தகப் பதற்றம் மற்றும் சர்ச்சைகளுக்குப் பின்னர், சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையிலான 50 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளைக் குறிக் கும் இந்த உச்சிமாநாட் டிற்கான எதிர்பார்ப்பு கள் குறைவாகவே இருந் தன.

பீஜிங்கின் வேண்டு கோளின் பேரில் இரண்டு நாட்கள் திட்டமிடப் பட்டிருந்த மாநாட்டின் கால அளவு திடீரென ஒரு நாளாகக் குறைக்கப்பட் டது.

வர்த்தக ஏற்றத்தாழ்வு, சந்தை அணுகல் மற்றும் அரிய மண் வளங்கள் தொடர்பான பிரச்சினைகள் நிகழ்ச்சி நிரலில் உள் ளன.

இந்த உச்சிமாநாட்டில், ஐரோப்பியத் தலைவர்கள் மின்சார வாகனங்கள் மற்றும் சீன தொழில்துறை அதிகப்படியான திறன் போன்ற விடயங்கள் குறித்தும் கவனம் செலுத் துவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை நடைபாதையிலுள்ள

## தற்காலிக வியாபார நிலையங்களை

## அகற்றுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்புறத்தில் நடைபாதையில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அத்தனை வியாபார நிலையங்களையும் அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

மக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படும் தற்காலிக வியாபார நிலையங்களை அகற்றுதல் செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக குறித்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

அதன் பிரகாரம் குறித்த நடைபாதையில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அத்தனை வியாபார நிலையங்களையும் எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அகற்றுமாறும் அதனை மீறி வியாபாரங்களில் ஈடுபடுகின்றவர்களின் அத்தனை வியாபார நிலையப் பொருட்களும் எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி புதன்கிழமை சபையினால் கையகப்படுத்தப்படும்.

அத்துடன் குறித்த நடைபாதையில் பயணிப்பவர்களுக்கு இடையூறாக இருக்கின்ற அத்தனை விடயங்களையும் அகற்றுவதோடு நடைபாதையில் வாகனங்கள் நிறுவத்துவதும் முற்றாக தடை செய்யப்படுகின்றது. குறித்த அறிவித்தலினை மீறி வாகனங்களை நிறுத்துவோர் மீது போக்குவரத்துப் பொலிஸார் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991- இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'5"<br>12 இல் செவ்<br>தகைமை/தொழில் : Bsc, MSc, ITWork (Aus)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/15861 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>2 இல் செவ்<br>கி-பா:32 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc, MBA, Assistant Manager<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி(வெளிநாடு)<br>தொ.இ.: G/15839 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>12இல் செவ்<br>கி-பா :16<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில்-Bsc , QS<br>எதிர்பார்ப்பு: BSc , IT Degree Holder<br>தொ.இ: B/15862 | பிறப்பு- 1981- இந்து<br>நட்சத்திரம்-திருவாதிரை<br>8 இல் செவ்<br>கி-பா:29 1/2<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: AAT, Assistant Accountant(London)<br>எதிர்பார்ப்பு வெளிநாடு.விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/15841 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத் திரம்: அச்சுவினி<br>7இல் சூரி செவ்<br>கி-பா: 36<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: BSc,MSc,IT work (pvt<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/15863 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்-பூராடம்<br>கி-பா:10 ¾<br>உயரம் -5'5"<br>தகைமை/தொழில்: BSc,Civil Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ: G/15842 |
| பிறப்பு: 1975- இந்து<br>நட்சத்திரம் :திருவோணம்<br>8 இல் செவ்<br>கி-பா: 32<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்-BA ,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்.<br>விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15864 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா : 30 1/2<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில் -HNDM, Assistant Accountant<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15843 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத் திரம் :மூலம்<br>தகைமை/தொழில்: A/L.சுவிஸ்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15866 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா: 16<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில் -HNDA, PVT Work<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15845 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 418

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## பேசாவிரதம்

"நாங்கள் இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் பேசிக்கிறது இல்லை சார்" என்று ஒருவர் சொல்கிறார் என்றால் என்ன அர்த்தம் ஏதோ மனஸ்தாபம் என்று அர்த்தம்.

அவர்களுக்குள்ளே இப்படி ஒருவருக்கொருவர் பிடிக்கவில்லை என்றால் பேசாமல் இருந்துகொள்கின்றோம். சமாதானம் ஆகிவிட்டால் மறுபடியும் பேச ஆரம்பிதோம். கொஞ்சநாள் கழித்து இரண்டு பேரும் ஒரு கோபம் வந்தால் உடனே ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வதைவிட இது எவ்வளவோ பெற்றர். அதாவது பேசாமல் இருந்து விடுவது.

இப்படி ஒரு வழி இருப்பதனாலே தான் இன்றைக்கு எவ்வளவோ குடும்பங்கள் கோபத்துக்கு அடிதடிதான் வழி என்றால் இன்றைக்குப் பலபேர் ஆஸ்பத்திரிலேயேதான் படுத்திருக்க வேண்டும்!

கணவன் மனைவிக்குள்ளே கோபம் வந்துவிட்டால் உடனே ஒருவருக்கொருவர் பேசாமல் இருந்து விடுவது சகஜம்!"இது நமது ஊரிலே மட்டும்தான் என்று நினைக்காதீர்கள். உலகம் முழுவதும் உண்டு.

நாள் கணக்கிலே பேசாமல் இருக்கிறதை நாம் பார்த்தி ருக்கிறோம்.வருடக் கணக்கிலே பேசாமல் இருப்பதையும் சில இடங்களிலே பார்த்திருக்கிறோம்.50 வருடமாக ஒருவருக்கொருவர் பேசாமல் இருந்த பொன்விழா தம்பதிகளைப் பற்றிக்கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

புடா பெஸ்ட் நகரத்திலே ஒரு தம்பதி. (ஹெல்லி தம்பதியர்)1889 இலே அவர்களுக்குள்ளே ஏதோ ஒரு சின்ன சச்சரவு உடனே பேசுவதை நிறுத்தி விட்டார்களாம்.

யார் முதலிலே பேசுகிறார்கள் பார்த்துக்கலாம் என்பது அவர்களுக்குள்ளே போட்டி! இப்படி 50 வருடம் ஓடிப்போன தாம்! பேச்சைத் தான் நிறுத்திக் கொண்டார்களே தவிர ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போய்விடவில்லை.

இல்லற வாழ்க்கையிலே எந்த மாற்றமும் இல்லை. ஏழு குழந்தைகளை வேறு பெற்றுக்கொண்டார்களாம். ஆனால் பேசவது இல்லை. இது எப்படி இருக்கு?

புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹியூகோ! அவரு டைய மகள் அடெலி! இந்தப் பெண் 65 வருடம் யார் கூடவும் பேச வில்லையாம். என்ன காரணம் தெரியுமா? அந்தப் பெண்தன்னு டைய 20 ஆவது வயதிலே ஆங்கில மதகுரு ஒருவருடைய பிள்ளையை (ஆல்ஃப்ரெட் பின்ஸெண்) காதலித்து கல்யாணம் செய்துகொண்டாராம்!

கொஞ்ச நாளிலே அந்தப் பையனுக்கு இவளைப் பிடிக்கவில்லை. வெறுத்து ஒதுக்க ஆரம்பித்தான்.

உடனே இந்தப் பெண்ரொம்பவும் நொந்து போய் தன் அப்பாவிடம் வந்து சேர்ந்தாள். தான் சாகிற வரைக்கும் யார் கூடவும் பேசுவதில்லை என்று சபதம் எடுத்தாள்.

அதே மாதிரி 1915 இலே அவள் சாகுற வரைக்கும் அதாவது 65 வருடம் அந்தப் பெண் யார் கூடவும் பேசவே இல்லையாம்!இது ரொம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது.

இல்லை?அமெரிக்காவிலே டென்வர் நகரத்திலே ஹிராம் கில்கோர்ன் என்று ஒருவர். ஒரு நாள் வேலையிலேயிருந்து ரொம்பவும் களைத்துப் போய் வீட்டுக்கு வந்திருக்கிறார். மனைவி சாப்பாடு சரியாக தயார் செய்து வைக்கவில்லையாம்.

அதுமட்டுமில்லை அந்தநேரம் அவர் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாராம்! அவ்வளவுதான் இவருக்குக் கோபம் வந்து விட்டது. பேச்சை நிறுத்தி விட்டார்.

எவ்வளவு? 21 வருடம்! ஒருவருக்கொருவர் பேசுவதே இல்லை. இது மாதிரி காரணத்துக்கெல்லாம் நம் ஊரிலே பேச்சை நிறுத்துவது என்று ஆரம்பித்தால் அவ்வளவு தான்! பல வீடுகளுக்கு பாஷையே தேவைப்படாமல் போய்விடும்!

லாஸ் ஏஞ்சல்ஸ்ஸிலே எவாவில்மர் என்று ஒருவர். தன் மனைவிக்கு திருமண ஆண்டு விழா பரிசு ஒன்றும் வாங்கிக் கொடுக்கவில்லையாம்! 9 வருடம் பேச்சு கட்!

பெல்ஃபாஸ்ட் நகரத்திலே ஜான்டிம் என்று ஒருவர். 14 வருடம் தன் மனைவியிடம் பேசவில்லையாம்! ஒரே ஒரு தடவை ஏதோ ஒரு வார்த்தை பேசினாராம். அவ்வளவு தான்.

நம் ஊர் ஆள் ஒருவர் அழுதுகொண்டிருந்தார். ஏன் அழுகிறாய் என்று கேட்டேன். என் மனைவி 10 வருடம் என்கூட பேசமாட்டேன் என்று சபதம் போட்டுவிட்டா சார்! என்றார்.

அதற்குப்போய் யாராவது அழுவார்களா? என்றேன்."சார்! நான் அதற்காக அழவில்லை! அந்த பத்து வருடம் இன்றை யோடு முடியுது சார்! என்று சொல்லிவிட்டு மறுபடியும் கண்ணைத் துடைத்துக்கொண்டார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டுகளை பெருமையுடன் நிறைவு செய்யும் RDB வங்கி

### வங்கித் தலைவரின் வாழ்த்துச் செய்தி



பிரதேச அபிவிருத்தி வங்கியானது தனது 40ஆவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடுகின்ற மிக முக்கியமான இச் சந்தர்ப்பத்தில் வாழ்வாதார நிலைமையினைக் கட்டியெழுப்புவதில் எம் வங்கி வழங்கியுள்ள பங்களிப்பினை நான் பெருமையுடன் நினைவுகூருகின்றேன். நாம் கடந்து வந்துள்ள இந்த மைல்கல்லானது எமது கூட்டு அர்ப்பணிப்பு மற்றும் எமது மதிப்பு வாய்ந்த பங்குதாரர்களின் நீடித்து நிலைத்து நிற்கும் நம்பிக்கைக்கு ஒரு பலமிக்க சான்றாகவும் விளங்குகின்றது.நான்கு தசாப்த காலமாக பிரதேச அபிவிருத்தி வங்கியானது அடித்தள நிலை மக்களின் பொருளாதார மாற்றத்தின் மையப்பொருளாகத் திகழ்ந்து வருகின்றது. சமூகங்களை ஒன்றிணைக்கும் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நாம் நிதி வசதியளித்துள்ளோம். அத்துடன், உள்நாட்டுப் பொருளாதாரங்களை இயங்கச் செய்யும் சிறு வணிகங்களையும் நாம் மேம்படுத்தியுள்ளதுடன், அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்புக்களை உருவாக்கித் தந்திடும் திட்டங்களையும் நாம் முன்னோடியாகக் கொண்டுள்ளோம்.

இந்த சாதனைகள், எமது நிறுவனத்திற்கு மாத்திரமல்லாது எமது கதையின் ஒரு பகுதியாகத் திகழும் ஒவ்வொரு பணிக்குழாம் அங்கத்தவருக்கும். பங்குதாரருக்கும் அதேசமயம் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் உரித்தாகும்

**லசந்த பெர்னான்டோ தலைவர், RDB வங்கி**

### பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியின் வாழ்த்துச் செய்தி



இன்று நாம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்றோம். இவ்வேளையில் எமது நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்பினை நல்குவதற்கான வாய்ப்பு கிட்டியமை தொடர்பில் நான் உண்மையிலேயே பெரும் திருப்தியடைகின்றேன். இம் முக்கிய மைல்கல்லானது எமது நான்கு தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட செயற்பாடுகளைக் குறித்து நிற்கின்றது. இது எமது கூட்டு முயற்சியின் மூலமாக நாம் நனவாக்கிய பலரின் கனவுகள், நாம் தொடர்புற்றிருந்த பல்வேறு சமூகங்கள் மற்றும் எண்ணற்றோரின் வாழ்வுகளைக் குறித்து நிற்கின்றது.

1985ஆம் ஆண்டு நிறுவப்பட்டது முதல் தேசிய அபிவிருத்திக்கு பெரும் உந்துசக்தியாக நாம் திகழ வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம். எமது நாட்டின் நகரங்களை ஒன்றிணைக்கும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியுதவிகளை வழங்குவதிலிருந்து உள்நாட்டிலுள்ள சமூகங்களை நிலைபேறானதாக ஆக்கும் சிறு வணிகங்களை ஊக்குவிப்பது வரையான ஒவ்வொரு செயற்பாடுகளும் வளம் பொருந்திய இலங்கைத் திருநாட்டை அனைவருக்காகவும் உருவாக்குதல் என்ற எமது நோக்குடன் தொடர்புற்றுள்ளன.உங்களது முன்னேற்றத்தின் பங்காளராகத் திகழ வேண்டும் என்ற எமது உறுதிப்பாட்டில் எவ்வித மாற்றங்களும் நிகழாமல் இருக்கும்.எமது இந்தப் பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். எதிர்காலச் சந்ததியினருக்கு நேர்மறையான முறையில் தாக்கம் ஏற்படுத்தும் பிரதேச அபிவிருத்தி வங்கியின் நோக்கங்களை தொடர்ந்தும் வளப்படுத்துவோம்.

**DMTS குமார, பொது முகாமையாளர்/**
**பிரதான நிறைவேற்று அதிகாரி(பதில் கடமை)RDB வங்கி**

### ஆதி முதல் அறிந்தவர்

RDB வங்கியின் எழுச்சியூட்டும் பயணம் 1985 ஆம் ஆண்டு தொடங்கியது. இது 1985 ஆம் ஆண்டு 15 ஆம் எண் RRDB சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. கிராமப்புற இலங்கையில் நிதி இடைவெளியைக் குறைக்கும் நோக்கத்துடன், அடிமட்ட சமூகங்களைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், உள்ளடக்கிய வளர்ச்சிக்கான விதைகளை நட்டு, மாவட்ட அளவிலான வங்கிகள் நிறுவப்பட்டன.1997 ஆம் ஆண்டு வாக்கில், 1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க RDB வங்கிகள் சட்டத்தின் கீழ் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 17 பிராந்திய கிராமப்புற மேம்பாட்டு வங்கிகளை ஆறு மாகாண மேம்பாட்டு வங்கிகளாக ஒன்றிணைத்தது. அவையாவன: ரஜரட்ட, ருஹுணு, வயம்ப, கந்துரட்ட, ஊவா மற்றும் சப்ரகமுவ.

2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம் ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியது. இது ஆறு வங்கிகளையும் ஒரே தேசிய நிறுவனமாக இணைக்க வழிவகுத்தது. இது மே 1, 2010 அன்று. தேசிய அளவில் RDB ஆக, அரசாங்கத்திற்குச் சொந்தமான மேம்பாட்டு வங்கியின் நோக்கம், விவசாயம், தொழில், வர்த்தகம், வணிகம், கால்நடைகள், மீன்பிடி மற்றும் சுற்றுலா நடவடிக்கைகள் மற்றும் பெண்களின் அதிகாரமளித்தல் ஆகியவற்றின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த பிராந்திய பொருளாதார வளர்ச்சியை எளிதாக்குவதாகும். முக்கியமாக சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதன் மூலமும் அவர்களுக்கான சேமிப்புப் பழக்கத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமும்

**வீடு வீடாகச் செல்லும் கருத்துடன் வங்கிச் சேவை**

"வீட்டுக்கு வீடு" என்ற கருத்தில் வேரூன்றிய RDB, வங்கி சேவைகளை நேரடியாக மக்களுக்கு அவர்களின் வீடு வீடாக வணிகப் பாதையில் கொண்டு செல்வதில் எப்போதும் கவனம் செலுத்தி வருகிறது.

RDBயின் CSR முயற்சிகள், நிலையான வளர்ச்சிக்கான அதன் ஆழ்ந்த அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன. அதன் முதன்மைத் திட்டங்களில்:

•RDB திரி அபிமானி (2021 முதல்): மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் வழிகாட்டுதல், பயிற்சி மற்றும் விருதுகள் மூலம் பெண் தொழில்முனைவோருக்கு மகுடம் சூட்டி அதிகாரம் அளிக்கிறது.

•RDB புத்தக சதகரா: அனைத்து மாகாணங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுக்கு பயிற்சி புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்களை விநியோகித்தல், அடுத்த தலைமுறை கற்பவர்களுக்கு ஆதரவளித்தல்.

•ஆர்வமுள்ள மற்றும் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்த, தொழில்முனைவோரை மையமாகக் கொண்ட நிதி கல்வியறிவு திட்டங்கள் மற்றும் பட்டறைகளை ஏற்பாடு செய்தல்.

**40 ஆண்டுகால தாக்கத்தைக் கொண்டாடுதல்**

ஜூலை 13, 2025 அன்று RDB பெருமையுடன் அதன் 40 ஆவது மைல்கல்லை எட்டும்போது, கொண்டாட்டங்கள் ஜூலை 25 முதல் 27 வரை BMICH இல் "uq, b|kau okak flfkla" என்ற சக்திவாய்ந்த கருப்பொருளின் கீழ் தொடர்ச்சியான நினைவு நிகழ்வுகளுடன் முடிவடையும்.

**சிறப்பம்சங்கள் பின்வருமாறு:**

நினைவு முத்திரை வெளியீடு, RDB தொழில்முனைவோர் வர்த்தக கண்காட்சி, சிறந்த தொழில்முனைவோருக்கான விருது வழங்கும் விழா, திறமை நிகழ்ச்சி, RDB வினாடி வினா, மேலும் பல அற்புதமான செயற்பாடுகள், ஒரு மேம்பாட்டின் மரபு, ஒரு வாக்குறுதியளிக்கும் எதிர்காலம்.

தாழ்மையான தொடக்கத்திலிருந்து உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் அடிமட்ட அதிகாரமளிப்பின் தேசிய அடையாளமாக மாறுவது வரை, RDB இலங்கையின் நிதி முதுகெலும்பாகத் தொடர்கிறது. மீள்தன்மை, புதுமை மற்றும் இதயத்துடன் எதிர்காலத்தில் முன்னேறுகிறது.

---

## 'சர்வதேசமே மௌனத்தைக் கலை'
## மனிதப் புதைகுழிகளுக்கு நீதிகோரி
# மன்னாரில் அமைதிப் பேரணி

(மன்னார்)

**வடக்கு- கிழக்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித புதைகுழிகளுக்கு நீதி வேண்டி மன்னார் அடம்பன் சந்தியில் இருந்து திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடம் நோக்கி நேற்று வியாழக்கிழமை காலை அமைதிப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.**



மாந்தை மேற்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குறித்த அமைதிப் பேரணி இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் சந்தியில் நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் குறித்த அமைதிப் பேரணி ஆரம்பமானது.

குறித்த பேரணியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாகப் பயணித்தனர்.

"எங்கே எங்கள் உறவுகள் எங்கே?, இலங்கை அரசே இது நாடா அல்லது இடு காடா?, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், மனிதனும் புதை குழிக்குள் நீதியும் புதை குழிக்குள்ளா?, சர்வதேசமே மௌனத்தை கலை" உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் அடம்பனில் இருந்து திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழி நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

அதனைத்தொடர்ந்து திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதை குழிக்கு முன் ஒன்று கூடி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும்,மனித புதைகுழியில் மீட்கப்பட்டவர்களுக்காகவும் அஞ்சலி செலுத்தப்பட்டு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அதனைத்தொடர்ந்து மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளாரிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஏற்பாட்டுக் குழு சார்பாக கையளிக்கப்பட்டது. (நி-285)

---

### மன்னார் நானாட்டான் பகுதியில்
## பட்டப் பகலில் வீடு புகுந்து கத்திமுனையில் கொள்ளை

(மன்னார்)

மன்னார் -நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நானாட்டன் முருங்கன் வீதியில் வசித்து வரும் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவரின் வீட்டில் புகுந்த முக மூடித் திருடன் கத்தியை காட்டி மிரட்டி கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக தெரியவருகிறது.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆசிரியை வீட் டில் தனிமையில் இருந்த போது பின் பக்க வேலியால் வீட்டுக்குள் புகுந்த திருடன் குறித்த வீட்டின் அருகில் வங்கிகளும் கடைகளும் இருந்த போதும் சத்தம் போடக் கூடாது என்று கத்தி முனையில் மிரட்டி ஆசிரியையின் கழுத்தில் அணிந்திருந்த 2 1/2 பவுண் சங்கி லியை கொள்ளையிட்டதுடன் குறித்த ஆசிரியை கையில் அணிந் திருந்த வளையல்களை கழற்ற முடியாமல் விட்டு திருடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் முருங்கன் பொலி ஸார் வருகை தந்து சம்பவ இடங்களை பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-285)

---

## மொழி பெயர்பாளராக சத்தியப் பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு மற்றும் அகில இலங்கை சமாதான நீதிவான் ஸ்ரீ சண்முகான் கோகுலன் நேற்று முன்தினம் புதன்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்னிலையில் அரச அங்கீகாரம் பெற்ற சத்திய மொழி பெயர்ப்பாளராக (தமிழ்- ஆங்கிலம்) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 829





அதற்காக நான் அல்லும் பகலும் பிரார்த்தனை செய்து வருவேன்!" என்றான்.

உட்கார்ந்திருந்த பூங்குழலி திடீரென்று எழுந்து நின்றாள். ஓடைக் கரையில் இருந்த ஒரு மரத்தின் பக்கமாக உற்றுப் பார்த்தாள். சேந்தன் அமுதனும் அந்தத் திசையை நோக்கினான். மரக்கிளைகளின் மத்தியில் ஒரு பெண்மணியின் முகம் தெரிந்தது. சேந்தன் அமுதன் ஒரு கணம் அங்கே நின்றவளின் முகத்தில் தன் அன்னையின் முகச் சாயலைக் கண்டு திகைத்துப் போனான். பின்னர், அவள் தன் அன்னை இல்லையென்பதை அறிந்து கொண்டான். பூதத் தீவில் வசிப்பதாகப் பூங்குழலி கூறிய தன் பெரியம்மாவாக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான். பூங்குழலி படகிலிருந்து தாவி ஓடைக் கரையில் குதித்து அந்தப் பெண்மணியை நோக்கி விரைந்து ஓடினாள்.

### 18 ஆம் அத்தியாயம்
### அம்பு பாய்ந்தது!

ஓடைக் கரையில் ஒரு மரத்தின் பின்னால் மறைந்தும் மறையாமலும் நின்ற ஊமை ராணியைப் பூங்குழலி பார்த்தாள். எதிர்பாராத சமயத்தில் எதிர்பாராத இடத்தில் அவளைக் கண்டதினால் பூங்குழலிக்குச் சிறிது திகைப்பு உண்டாயிற்று. அயல் மனிதர்களைப் பார்ப்பதில் ஊமை ராணிக்குப் பிரியம் இல்லை என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. 'படகில் சேந்தன் அமுதன் இருக்கிறானே, அவனைக் கண்டு ஒருவேளை அத்தை ஓடிவிடுவாளோ?' என்ற எண்ணம் அவள் மனத்தில் தோன்றிய அந்தக் கணமே அவளுடைய அத்தை ஓடத் தொடங்கி விட்டாள். பூங்குழலி சட்டென்று ஓடத்திலிருந்து ஓடைக் கரையில் குதித்து மேட்டில் ஏறிப் பார்த்தாள். அத்தை சற்றுத் தூரத்தில் அடர்ந்த காட்டுக்குள் மறைந்ததைக் கவனித்தாள்.

இதற்குள் சேந்தன் அமுதனும் கரையில் குதித்து மேட்டில் ஏறிப் பூங்குழலி நின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

"பூங்குழலி! பூங்குழலி! சற்று முன் இங்கே நின்றது யார்?" என்று கேட்டான். "உனக்குத் தெரியவில்லையா, அமுதா?"

"நிச்சயமாகச் சொல்லத் தெரியவில்லை! ஒருவேளை"

"ஆமாம், என் அத்தை தான்! செத்துப் போனதாக நீ நினைத்துக் கொண்டிருந்த உன் பெரியம்மாதான்!"

"ஆமாம் அம்மாவின் ஜாடை கொஞ்சம் இருந்தது போல் தோன்றியது"

"வெறுமனே ஏதாவது சொல்லாதே! சின்ன அத்தைக்கும் பெரிய அத்தைக்கும் உருவ ஒற்றுமை ஒன்றுமில்லை குணத்தில் ஒற்றுமையும் இல்லை. வீட்டில் கட்டிப் போட்டிருக்கும் பசு எங்கே? ஏதேச்சையாகத் திரியும் சிங்கராணி எங்கே?"

"சரி, அப்படியே இருக்கட்டும், ஏன் உன்னைப் பார்த்ததும் சிங்கராணி ஓடிப் போய்விட்டாள்?"

பூங்குழலி சிரித்துவிட்டு, "உன்னைப் பார்த்து விட்டுத் தான் ஓடினாள். அயல் மனிதர்களைப் பார்ப்பதற்கு அவளுக்குப் பிரியமிருப்பதில்லை" என்றாள். "நான் அயல் மனிதன் அல்லவே?"

"அத்தைக்கு அது தெரியாதல்லவா? தெரிந்து கொண்டால் உன்னைப் பார்த்து விட்டு ஓடமாட்டாள். ஆனால் தெரிந்து கொள்வதற்கு முன்னால் ரொம்பவும் தயங்குவாள்."

"பூங்குழலி! இப்போது என்ன செய்யப் போகிறாய்?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புத்தாண்டுச் சுற்றுலா



(நேற்றைய தொடர்ச்சி)

மறு நாள் நால்வருமே நமது பெற்றோர்கள் இதற்கு பூரண சம்மதம் சொல்லிவிட்டார்கள். எவ்வளவு செலவானாலும் பங்கு போட்டு செய்து கொள்ளலாம் என்று சொல்லி விட்டார்கள். அவர்கள் மகிழ்ச்சியுடன் இந்த செய்தியைப் பகிர்ந்து கொண்டனர்.

மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று நால்வரும் ஆலோசித்தனர். நாளை ஞாயிற்றுக்கிழமை, நாம் எல்லாம் ஒரு காப்பகத்துக்கு போகின்றோம் ரெடியாக இருங்கள் என்று முஸ்தபா சொல்லி விட்டு வீட்டுக்கு சென்றான். மற்றைய மூவரும் ஒரு வித எதிர்பார்ப்புடன் அவரவர் வீட்டுக்கு சென்றனர்.

மறு நாள் இவர்கள் அந்த காப்பகத்தின் மேலாளரிடம் தங்களின் திட்டத்தைச் சொன்னார்கள். அவர் சிறிது நேரம் யோசித்தவர். நிறைய செலவுகள் பிடிக்குமே என்று இழுத்தார். அதைப் பற்றி கவலைப் படாதீர்கள், எங்களின் பெற்றோர்கள் செலவு பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்கள், உங்கள் சம்மதம் இருந்தால்தான் மேற்கொண்டு ஏற்பாடுகளை செய்ய முடியும். இவர்களின் தீவிரத்தை பார்த்த அந்த நிர்வாகி, சரி புத்தாண்டு அன்று நாங்கள் அனைவரும் தயாராக இருக்கிறோம் என்றனர்.

அவரின் சம்மதத்தை கேட்டவுடன் தான் இவர்களுக்கு உயிரே வந்தது. நன்றி ஐயா, நாங்கள் மேற்கொண்டு மற்ற வேலைகளைக் கவனிக்கிறோம் என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு திரும்பினர். ஊரே வேறு விதமாக கொண்டா டிக்கொண்டிருந்த புத்தாண்டு அன்று இந்த நால்வரின் குடும்பங்களும், இவர்களின் திட்டத்தை கேள்விப்பட்டு இவர்களுடன் பங்கு கொள்ள வந்திருந்த மேலும் நான்கைந்து குடும்பங்களும் ஒரு பெரிய சுற்றுலா பேருந்தை எடுத்துக்கொண்டு அந்த "அநாதை குழந்தைகள் காப்பகத்தின் முன் சென்று நின்றனர்.

அங்கு நல்ல உடையணிந்து காப்பகத்து நிர்வாகியுடன் பெற்றோரை இழந்து அந்த காப்பகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த குழந்தைகள் தயாராக நின்று கொண்டிருந்தனர். அந்தப் பேருந்தில் வந்திருந்த அனைத்து குடும்பத்தினரும் கீழே இறங்கி அந்த குழந்தைகளுக்கு புத்தாண்டு வாழ்த்து சொல்லி வரிசையாக அவர்களை, பேருந்தில் ஏற்றி விட்டனர்.

சுமார் ஐம்பது குழந்தைகளுடன், கீழே நின்று கொண்டிருந்த அனைவரும் பேருந்தில் ஏறினர். பேருந்து இப்பொழுது ஊட்டியை நோக்கி தன் பயணத்தை தொடர்ந்தது.

மேட்டுப்பாளயம் வந்ததும் அனைவரும் இறங்கி நல்ல சிற்றுண்டியில் காலை உணவை உண்டனர். அதன் பின்னர் அந்த குழந்தைகளுடன் ஆடிப் பாடிக் கொண்டு ஊட்டியை நோக்கி சென்றனர்.

அன்று காலை முதல் ஆரம்பித்த ஆட்டம் பாட்டம், மதியம் ஒரு கடையில் விருந்து உண்டு விட்டு, ஊட்டியின் அனைத்து இடங்களையும் சுற்றிப்பார்த்து, பின் கீழே இறங்கினர்.

இரவு அதே போல் நல்ல சிற்றுண்டிக் கடையில் நிறுத்தி அனைவரும் தேவையானதை உண்டு விட்டு மீண்டும் கோவைக்கு கிளம்பினர்.

இரவு ஒன்பது மணி அளவில் காப்பகத்திற்கு வந்து, அவர்களைப் பத்திரமாக இறக்கிவிட்டனர்.

அந்த நிர்வாகியும், குழந்தைகளும், மிகுந்த மகிழ்ச் சியுடன் இவர்களுக்கு நன்றி சொல்ல, முஸ்தபாவுடன் அவன் நண்பர்கள் மூவரும், மற்றும் அவர்களின் பெற்றோர்களும், உங்களுக்குத்தான் எங்கள் நன்றி "இந்த நாளை இவ்வளவு மகிழ்ச்சியாக கழிக்க உதவி இருக்கிறீர்கள் என்று அவருக்கும். அந்த குழந்தைகளுக்கும் வாழ்த்து சொல்லி விட்டு வீட்டுக்கு திரும்பினர்.

மறு நாள் அவர்கள் வசித்து கொண்டி ருந்த அடுக்கு மாடி குடியிருப்பில் உள்ளோர் அனைவரும், முஸ்தபா மற்றும் அவன் நண்பர்களை மனதார பாராட்டினர். (முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதைச் செய்தாலும் தெளிவு, அறிவு மற்றும் அன்போடு செய்ய வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்கள் போராட முன்வந்தாலன்றி.....

ஆசிரியர்களின் இடமாற்றத்தில் முறைகேடு என்றால், அதற்காக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் போராடும்.

அதிபர் நியமனங்களில் சிக்கல் என்றால் அதற்கும் தொழிற்சங்கங்கள் உண்டு. இதைவிட, கல்வி நிர்வாக சேவையில் மூப்பு அடிப்படை கவனிக்கப்படவில்லை என்றால் அதற்கும் தாய்ச் சங்கம் குரல் கொடுக்கும்.

இதேபோல, மருத்துவர்கள் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்வர். இதற்கு ஈடாக தாதியர் சங்கங்களும் வேலை நிறுத்தம் செய்யும். இப்படியே துணை மருத்துவ சேவையினர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவர்.

இதேபோல, பல்கலைக்கழக ஆசிரியர்களும் கல்வி சாரா உத்தியோகத்தர்களும் மாறி மாறி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர்.

இதன் காரணமாக இலங்கையின் அரச நிர்வாகம் என்பது தொழிற்சங்கங்களை சாந்தப்படுத்துகின்ற பணியைச் செய்கின்றதே தவிர, மேற்படி அரச பணியாளர்களின் கடமை சரியாக நடைபெறுகின்றதா? அவர்களின் சேவை திருப்தியாக உள்ளதா? என்று ஆராய்வதில்லை.

மாறாக, அரச சேவையில் இணைந்தவர்களை வாலாஜப்படுத்துவதிலேயே அரசாங்கத்தின் காலம் கடந்து போகிறது.

ஆம், இலங்கையில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்குப் பொறுப்புக்கூறுவதை அதிபர், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் செய்யாதவரை,

வைத்தியசாலைகளில் மருத்துவர்களின் கவனிப்பு இல்லாமல் ஏற்பட்ட இறப்புகளுக்கு பொறுப்பான மருத்துவர்களிடம் காரணம் கேட்காதவரை,

வேலை நிறுத்தங்களால் பல்கலைக்கழக மாணவர்கள் தமது பட்டப்படிப்பை உரிய காலத்தில் நிறைவு செய்ய முடியாமல் போனமைக்கு பொறுப்பானவர்கள் விளக்கம் தராதவரை, அரச பதவிகள் பற்றி மட்டுமே சிந்திக்கப்படும்.

ஆம், இலங்கையில் அதிலும் குறிப்பாக நம் தமிழர் பகுதிகளில் பதவிகள் பற்றியே பேசப்படுகின்றன. இங்கு பயனாளிகள் பற்றி எவரும் கருசனை கொள்வதில்லை.

இங்குதான் 11 வருடங்கள் பாடசாலைக்குச் சென்ற என் பிள்ளை சித்தியடையாததற்குக் கல்வி நிர்வாகமே பதில் சொல் என்று பெற்றோர்கள் போராடாதவரை,

எம் உறவினரின் மரணத்துக்கு மருத்துவர்களின் அசமந்தமே காரணம் என்று வைத்தியசாலையைச் சூழ்ந்து பொதுமக்கள் கோசம் போடாதவரை,

பல்கலைக்கழக மாணவர்களின் காலத்தை வீணாக்காதே என்று பெற்றோர்கள் பல்கலைக்கழக வாசல்களில் நிற்காதவரை, அத்தனை இழப்புகளும் பாதிப்புகளும் பொது மக்களுக்கானதென்பது மறுக்க முடியாத உண்மை.

### நல்லூர் திருவிழாவை முன்னிட்டு

# ஆலய வீதிக்கு மணல் பரப்புவதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை நீக்குக

## கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ஆலய வீதிக்கு மணல் வழங்குவது அவசியமாகும். எனவே அதன் இடர்ப்பாட்டை கவனத்தில் எடுக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந் திருவிழாவை முன்னிட்டு அடியவர்களின் நன்மை கருதி வீதிக்கு மணல் பரப்புவது வழக்கம். இந்த ஆண்டு மணல் பெறுவதிலுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக இதுவரை மணல் வழங்கப்படவில்லை என அறிகிறோம். ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதட்சணம், அடியழித்தல் போன்ற நேர்த்திகள் செய்யும் திருவீதி தார்வீதியாக உள்ளது. உடனடியாக மணல் வழங்குவதற்கான ஏற்பாட்டை பொறுப்பு வாய்ந்தவர்கள் செய்யவேண்டும்.

இவ்விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர், மாநகர ஆணையாளர் துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காலந்தோறும் நான்கு வீதியும் புதிய மணல் பரப்பி பன்னீர் தெளித்து தெய்வீகமாக நடைபெறும் திருவிழாச் சிறப்பைப் பேணுவதற்கு அனைவரும் உடன் அக்கறை எடுங்கள். இந்து சமயத் திணைக்களம், சமய விவகார அமைச்சு இத்தகைய விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

பல ஆயிரம் மக்கள் கூடும் திருத்தலங்களில் நடைபெறும் திருவிழாக் கால ஒழுங்குகளைப் பேண உதவுங்கள். இவ்விடயம்தொடர்பாக அனைத்து பொறுப்பு வாய்ந்தவர்களும் கூடிய அக்கறை எடுக்குமாறு சைவ மக்கள் சார்பில் அனைவரது கவனத்திற்கும் முன்வைக்கப்படுகிறது என்றுள்ளது. (ம-7)

## திறன்பலகை கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்துக்கான நிகழ்வானது இன்று (25) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு.நந்தகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் திறன் பலகைப்பயன்பாட்டை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ம-7)

## சட்டவிரோத வாகன விவகாரம்

### ரோஹிதவின் மருமகனுக்கு மறியல் ஜகத் விதானவின் மகனுக்குப் பிணை

(கொழும்பு)

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி, பதிவு செய்யப்பட்ட ஜீப் ரக வாகனக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்பில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடியை எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மதுகம நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இந்த சர்ச்சைக்குரிய ஜீப் ரக வாகன கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகனான ரஷிக விதானவை தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## முகாமைத்துவ சிறப்புமாணி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப் பட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த உயர்தர G.C.E.(A/L) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் ஏதேனும் அடிப்படை கற்கைநெறியில் 60 திறமை மட்டத்தினை பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின், SLQF மட்டம் 2 இல் 30 திறமை மட்டத்தினை கொண்ட ஒரு உயர்தர சான்றிதழ் கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல் (தேர்வு பரீட்சைக்கு அமரத் தேவையில்லை). மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 24.08.2025 அன்று நடாத்தப்படும் தேர்வு பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது. விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 31.07.2025 வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021-222 3374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-7)

## மட்டக்களப்பில் விபத்து 28 வயது இளைஞன் பலி

மட்டக்களப்பு, ஏறாவூர் - மயிலம்பாவெளி பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

28 வயது இளைஞன் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து ஏறாவூர் நோக்கிப் பயணித்த உந்துருளி வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான போதே அவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம் எப்பாவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மகா இலுப்பல்லம பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை (24) அதிகாலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மகா இலுப்பல்லம பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவர் ஆவார்.

இவர் வாழைத்தோட்டத்திற்குள் நுழைந்த காட்டு யானையை விரட்ட முயன்ற போது காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக எப்பாவல பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 21

சொக்கன்

பாலஸ்தீனத்தில் நீ நிலம் வாங்கலாம், வீடு வாடகைக்கு எடுக்கலாம், படிக்கலாம், வேலை பார்க்கலாம், தொழில் செய்யலாம், திருமணம் செய்து கொண்டு, பிள்ளை குட்டி பெற்றுக்கொண்டு சந்தோஷமாகக் குடும்பம் நடத்தலாம், எதற்கும் தடையில்லை என்ஜாய்!

பிரிட்டிஷ் அரசாங்கம் இப்படி வெளிப்படையாக யூதர்களுக்கு ரத்தினக் கம்பளம் விரிக்க ஆரம்பித்தவுடன் அரேபியர்கள் கலக்கமாகிவிட்டார்கள் கட்சிக் கூட்டத்துக்கு பிரியாணி கொடுத்து லாரியில் ஆள் கூட்டி வருவதுபோல் யூதர்களின் எண்ணிக்கை எகிறிக்கொண்டே போனால் பாலஸ்தீனத்தில் அவர்கள் மெஜாரிட்டி ஆகிவிடுவார்களோ என்று பயந்தார்கள்.

ஒருபக்கம் அரேபியர்கள் இப்படிப் பதறிக்கொண்டிருக்க இன்னொருபக்கம் பிரிட்டிஷ் ஆசீர்வாதத்துடன் பாலஸ்தீனம் முழுக்க யூதக் குடியிருப்புகள் அதிகரிக்க ஆரம்பித்திருந்தன. அவர்களே சமூகக் குழுக்களை அமைத்துக்கொண்டு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தினார்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொண்டார்கள் வெளியிலிருந்து வருகிற ஆபத்துகளில் இருந்து பாதுகாத்துக் கொண்டார்கள். தங்களுக்கென்று சொந்தமாக ஆட்சி அமைத்து அரசாங்கம் நடத்தாததுதான் பாக்கி.

முப்பதுகளின் இறுதியில் யூதர்களின் நிம்மதியான வாழ்க்கைக்கு வேட்டு வைப்பது போல் ஒரு வேலை நடந்தது. அதற்குக் காரண கர்த்தா ஸ்ரீமான் அடால்ஃப் ஹிட்லர்.

எங்கேயோ ஜேர்மனியில் ஹிட்லர் அராஜகம் செய்கிறார் யூதர்களை வாட்டி வதைக்கிறார் அதனால் பாலஸ்தீனத்தில் உட்கார்ந்திருக்கிற நமக்கு என்ன வந்தது?

யூதர்களால் எப்போதும் அப்படி நினைக்கமுடியாது அவர்களுடைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உலகில் எங்கே இருந்தாலும் தாங்கள் ஒரே மாயக் குடையின் கீழ் வாழ்வது போல்தான் உணர்வார்கள் ஒருவருக்குப் பிரச்சினை என்றால் மற்றவர்கள் ஓடிவருவார்கள் எந்தப் பலனும் எதிர்பார்க்காமல் பரஸ்பரம் உதவி செய்து கொள்வார்கள்.

இதனால் அங்கே ஐரேப்பாவில் ஹிட்லர் தடியைத் தூக்குகிறார் என்றதும் இங்கே பாலஸ்தீனத்தில் இருக்கிற யூதர்கள் எதிர்நடவடிக்கைகளை யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஹிட்லரின் அராஜகத்தால் பாதிக்கப்பட்ட யூதர்களை பாலஸ்தீனத்துக்குள் கொண்டுவருவது எப்படி என்று யோசித்துத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டன.

ஆனால் இந்தத் திட்டங்கள் எதையும் அவர்களால் ஒழுங்காக நிறைவேற்றமுடியவில்லை. காரணம் இதுவரை யூதர்களுக்கு ஆதரவாக இருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இப்போது வேண்டுமென்றே முரண்டு பிடித்தது. எங்களுடைய அனுமதி இல்லாமல் புதிதாக யூதர்கள் யாரும் இங்கே வரக் கூடாது என்று கதவைச் சாத்தித் திண்டுக்கல் பூட்டு மாட்டிவிட்டார்கள்.

பிரிட்டிஷ்காரர்கள் ஏன் இப்படித் திடீரென்று மனம் மாற வேண்டும். அதற் கும் ஒரு காரணம் இருந்தது.



1938 ஆம் வருடம் நவம்பர் 7 ஆம் திகதி பாரிஸில் வாழ்ந்து கொண்டிருந்த ஹெர்ஷெல் க்ரின் ஸ்பன் என்ற யூத இளைஞன் காலையில் எழுந்து பல் தேய்த்தான் தன்னுடைய பெற்றோருக்கு ஒரு கடிதம் எழுதினான் கடைக்குப் போய் ஒரு துப்பாக்கி வாங்கிக் கொண்டான். அந்த ஊரில் உள்ள ஜெர்மனி தூதரகத்துக்கு ரயில் பிடித்தான். ஹெர்ஷெலுக்கு ஜெர்மனிமீது தனிப்பட்ட கோபம் இருந்தது ஹிட்லரின் ஆட்சியால் அவனுடைய குடும்பத்தினர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

நியாயப்படி பார்த்தால் ஹெர்ஷெல் ஹிட்லரைதான் சுட்டிருக்க வேண்டும் அதற்கான வசதி வாய்புகள் இல்லாததால் பாரிஸில் இருக்கிற ஜெர்மனி தூதரகத்துக்குப் போனான். எதிர்ப்பட்ட அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்று விட்டான்.

இந்தக் கொலைச் சம்பவம் ஹெர்ஷெல் கொஞ்சமும் எதிர்பார்க்காத அதிர்வுகளை உண்டாக்கியது. ஹிட்லர் ஆட்சியின்கீழ் வாழ்கிற யூதர்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டார்கள். அவர்களுடைய கடைகள் தொழிற்சாலைகள் உடைத்து நொறுக்கப்பட்டன. ஐரோப்பாவிலிருந்து யூதச் சமூகத்தை மொத்தமாகத் துடைத்து எறிந்து விடவேண்டும் என்கிற ஆவேசத்துடன் ஹிட்லரின் அடிபொடிகள் வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

இதனால் ஹிட்லர் ராஜ்ஜியத்திலும் அக்கம் பக்கத்து நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களுக்கு மரண பயம் தொற்றிக்கொண்டது. இங்கேயே இருந்து உயிரை விடுவதற்குப்பதிலாக பாலஸ்தீனத்துக்குப் போய் மற்ற யூதர்களுடன் பிழைத்துக் கொள்ளலாம் என்று ஓட ஆரம்பித்தார்கள்.

உடனடியாக பிரிட்டன் உஷாராகிவிட்டது ஹிட்லர் ஆட்சியில் அடி வாங்குகிற யூதர்கள் எல்லோரும் பாலஸ்தீனத்தில் வந்து குவிந்தால் உள்ளூரில் ஏகப்பட்ட நெருக்கடிகள்வரும் அந்த அவஸ்தைகளைத் தவிர்ப்பதற்கு என்ன வழி என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்கள்.

இதற்காக அவசர அவசரமாகப் பாலஸ்தீன எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை அதிகப்படுத்தியது பிரிட்டிஷ் அரசாங்கம். ஒரு வருடத்திற்கு இத்தனை யூதர்கள்தான் உள்ளே வரலாம் மற்றவர்கள் வேறு எங்கேயாவது போய்ப் பிழைத்துக் கொள்ளுங்கள் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள்.

யூத சமூகம் கொதித்துப்போனது. பாலஸ்தீன மண்ணை அவர்கள் தங்களுக்குச் சொந்தமாகவே நினைக்க ஆரம்பித்திருந்தார்கள். இங்கே யூதர்ககளுக்கு இடம் இல்லை என்றால் அது என்ன நியாயம்?

உடனடியாக வெளிநாடுகளில் வாழ்கிற யூதர்களைப் பாலஸ்தீனத்துக்குள் கொண்டுவருவதற்கு ஒரு ரகசிய குழு உருவாக்கப்பட்டது. அதன் பெயர் மொசாட் லிஅலியா பெட்.

கொஞ்சம் நீளமான பெயர்தான் பின்னாள்களில் இந்த மொசாட் லிஅலியா பெட்தான் இஸ்ரேல் உளவுத்துறையாக உருவெடுத்தது என்பதால் நம்முடைய வசதிக்காக இதனைப் பழைய மொசாட் என்று அழைக்கலாம்.

பழைய மொசாடின் நோக்கம் பிரிட்டிஷ் கண்களில் அகப்படாமல் யூதர்களை பாலஸ்தீனத்துக்குள் கடத்திக் கொண்டு வருவது அதற்காக என்னென்ன தில்லுமுல்லுகள் செய்வதற்கும் அவர்கள் தயாராக இருந்தார்கள்.

இதுமாதிரி திருட்டுத்தனமாக ஆள் கடத்த வேண்டுமென்றால் அதற்குக் கடல் வழிதான் வசதி பழைய மொசாட் ஏஜென்ட்கள் உலகம் சுற்றிக் கப்பல் தேட ஆரம்பித்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் பல்வேறு...

ஒன்றினை உடைத்து அங்கு திருடியமை, சாவகச்சேரியில் தொலைபேசிக் கடை ஒன்றினை உடைத்து 96 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மற்றும் 2 கைபேசிகளை குறித்த சந்தேகநபர் திருடியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் இயங்கும், உப பொலிஸ் பரிசோதகர் திரு.மயூரன் தலைமையிலான குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது திருடப்பட்ட பல பொருட்களும் மீட்கப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## கஞ்சாவுடன்...

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கீழ் இயங்கும் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

காரைநகர் பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 34 வயதுடைய இருவரே கஞ்சாவை எடுத்துச் சென்றபோது பொன்னாலைப் பகுதியில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 12 கிலோ 730 கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7,104)

## கண்ணாடிப்...

நேற்றைய அகழ்வில் சிறிய கண்ணாடிப் போத்தல் ஒன்றும் இரும்புத் துகள்கள் சிலவும் சான்றுப் பொருட்களாக மீட்கப்பட்டுள்ளன.

அவை அனைத்தும் சான்றுப் பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## எமது அப்பாவை...

எமது அப்பாவை விடுதலை செய்யுமாறு இலங்கையின் எல்லா அரசாங்கங்களையும் கேட்டுக்கொண்டதாகவும் எனினும் எவரும் விடுதலை செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ள தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் இந்த அரசாங்கமாவது தங்கள் அப்பாவை விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் நேற்று இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

ஆனந்தசுதாகரனின் மகள் தெரிவித்துள்ளதாவது,

நான் எட்டுமாசம் வயிற்றில் இருக்கும்போதே அப்பாவைக் கொண்டு போய்விட்டார்கள். நாங்களும் எவ்வளவோ அரசாங்கத்தைப் போய் கேட்டுக்கொண்டிருந்தோம் அப்பாவை விடச்சொல்லி, யாருமே முன்வரவில்லை. இந்த அரசாங்கமாவது முன்வந்து எங்கள் அப்பாவை விடுதலை செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலில் விழுந்தெல்லாம் கேட்டோம். அப்பாவை விடுவார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தோம் விடவில்லை.

ஆனந்தசுதாகரனின் மகன் தெரிவித்துள்ளதாவது,

எனது அப்பா பிடிபட்டு 14 வருடங்களாகின்றது. நிறைய அரசியல்வாதிகளைச் சந்தித்து அப்பாவின் விடுதலை தொடர்பாகக் கதைத்தோம். இதுவரை எந்த முடிவும் இல்லை. இந்த அரசாங்கமாவது எங்கள் அப்பாவை விடுதலை செய்யவேண்டும் என்றார். (ம-7)

## ஒரு பில்லியன்...

உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதற்கமைய ஒரு பில்லியன் டொலர் இழப்பீடு வழங்குமாறு சிங்கப்பூர் கப்பல் நிறுவனத்திற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் இந்தப் பேரழிவைத் தடுக்கத் தவறியதன் மூலம் அப்போதைய கடலோரப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவாவும் மற்றொரு தரப்பினரும் அடிப்படை உரிமைகளை மீறியதாகவும் உயர் நீதிமன்றம் தமது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## 3 எலும்புக்கூடு...

சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், தடயவியல் பொலிஸார், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர், தொல்லியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவரூபி சஜிதரன் ஆகியோரின் பங்கேற்புடன் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

அகழ்வுப்பணிகள் தொடர்பாக நேற்று வியாழக்கிழமை (24) ஊடகங்களுக்குக்கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன்,

செம்மணியில் ஏற்கெனவே அகழ்ந்தெடுக்கப்பட்ட 67 மனித எலும்புக்கூடுகளுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை (23) பிற்பகலிலிருந்து நேற்று வரை 9 மனித எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக 76 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய நாளில் புதிதாக மூன்று மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதுவரை 88 மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை 20 வது நாளாக அகழ்வுப் பணிகள் தொடரும் என்றார். (ம-7,33)

## தாவடியில்...

வயிறு மற்றும் இடது கையில் பலத்த காயங்களுக்குள்ளான குறித்த நபர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இருவருக்குகிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்துத் தாக்குதலுக்குக் காரணம் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் நேற்று மண்டைதீவுப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,33,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 5900
O 7 1 9 7 4 8
அத சம்பத
O 9 7 4 8
சீட்டிழுப்பு இலக்கம் 475
National Lotteries Board

சுப தவசக்
2025.07.24
0816
கடகம் 11 45 50 51

தன நிதானய
திகதி - 2025.07.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1930
F 02 18 20 51 F
Double Chance 14078

மெகா பவர்
திகதி 24/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2248
L 22 13 20 55 70

ஜய
திகதி 2025.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 0168
J 5 2 6 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4142
சீட்டிழுப்பு திகதி 24.07.2025
O 22 40 61 71
O
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 1209
துலாம் 05 09 38 45 துலாம்
79211 29

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.07.2025 வெற்றி வாரம் 0608
C 2 3 2 2 1 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.495.884.80
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2874
சீட்டிழுப்பு திகதி 2025.07.24 தினம் வியாழக்கிழமை
15 22 27 73 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,669,976.00

சனிதா
திகதி 24.07.2025 வெற்றி வாரம் 5035
01 16 24 39 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,784,441.20
ரூ. 50,000/-
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
732
24.07.2025
வியாழக்கிழமை
20 22 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

சீட்டிழுப்பு வாரம் 4586
சீட்டிழுப்பு திகதி 24.07.2025 தினம் வியாழக்கிழமை
03 17 35 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,362,789.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 25 21 29 49 73
சுப்பர் இலக்கம்
2050
24.07.2025
வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.584,105,783.60
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2700
சீட்டிழுப்பு திகதி : 2025.07.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,148,596.00
01 43 49 51 R

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்க்கப்படும்...

நாம் மாற்ற வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (24) நடைபெற்ற கல்விச் சீர்திருத்தங்கள் குறித்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ரியூஷன் அதிகாலை 4 மணிக்குத் தொடங்குகிறது. வகுப்புகள் முடிந்த பிறகுதான் அவர்கள் பாடசாலைக்குச் செல்கிறார்கள். அந்தப் பிள்ளையின் வாழ்க்கை எப்படிப்பட்டது? பாடசாலைக்குப் பிறகு அவர்கள் மீண்டும் வகுப்பிற்குச் செல்கிறார்கள். அந்தப் பிள்ளைக்கு ஒரு பிள்ளைப் பருவம் தேவை இல்லையா? ஒரு கவிதையையோ பாடலையோ இரசிக்காத, ஒரு நாவலைப் படிக்காத, இலக்கியத்தால் வளர்க்கப்படாத, எந்தச் சமூக செயற்பாடும் இல்லாத இயந்திரங்களைப் போன்ற பிள்ளைகளை நாம் வளர்க்க விரும்புகிறோமா? இது போன்ற ஒரு நாடு முன்னோக்கிச் செல்ல முடியாது.

இந்தப்பிள்ளையின் மீது சுமத்தப்பட்டுள்ள கல்விச் சுமையைக் குறைக்க வேண்டும், அது நமது பொறுப்பு. பிள்ளை எழுப்பும்போது தூக்கம், வாகனத்திலும் தூக்கம், பாடசாலையிலும் தூக்கம். அந்தப் பிள்ளைகள் பாவம் இல்லையா? ரோபோக்கள் போல வளர்க்கப்படும் பிள்ளைகளின் தலைமுறையை நாம் மாற்ற வேண்டாமா?

பிள்ளைக்கு சுறுசுறுப்பான வாழ்க்கையை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் முழுமையான கல்வி, பாடவிதானம், கற்பித்தல், அதற்குள்ள எடை மற்றும் அளவை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றில் சீர்திருத்தங்களை நாம் கொண்டு வருவோம் என்றார். (ம-7)

## முல்லைத்தீவு...

மக்கள் தகவல் வழங்கியதையடுத்து குறித்த இடத்திற்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் மற்றும் கிராம சேவகர் கிணற்றினைப் பார்வையிட்ட போது சடலங்கள் நீரில் மிதப்பதை அவதானித்துள்ளனர்.

அதனையடுத்து முல்லைத்தீவு நீதிபதி சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டு சடலங்களை உடற்கூற்று பரிசோதனைக்குட்படுத்தி மன்றுக்கு அறிக்கையிடுமாறு மாங்குளம் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார். அதனையடுத்து சடலங்கள் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பிரேதப் பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளது. (ம-7,299,315)

## அரசியல் ...

குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினால் "விடுதலை" எனும் தொனிப் பொருளில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் சங்கிலியன் அரண்மனையிலிருந்து ஆரம்பமாகிய நடைபயணம் கிட்டுப் பூங்கா வரை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து விடுதலை விருட்சத்திற்கான விடுதலை நீர் பொதுக்குவளையிடுதலும், முன்னாள் அரசியற் கைதி விவேகானந்தனூர் சதீஸ் சிறைச்சாலையிலிருந்த போது எழுதிய "துருவேறும் கைவிலங்கு" எழுத்து ஆவணப்பேழை ஆய்வறிமுகமும் நடைபெற்றது.

மேலும் சிறைச்சாலை உணவு பரிமாறுதல் நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

குறித்த நிகழ்வின் போது மதத் தலைவர்கள், அரசியற் கட்சிச் செயற்பாட்டாளர்கள், அரசியற் கைதிகளின் குடும்பத்தினர், விடுவிக்கப்பட்ட முன்னாள் அரசியற் கைதிகள், குடிமக்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய குறித்த போராட்டமானது இன்றைய தினமும் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-7,33)


## வேலைவாய்ப்பு

| | |
|---|---|
| ➤ Wealth Planner | : 0769244235 |
| ➤ கைவினை கலைஞர்(பெண்கள்) | : 0760764565 |
| ➤ Marketing Coordinator | : 0772741206 |
| ➤ DSR, Bike Store room Manager | : 0770460096 |
| ➤ Branch Manager | : 0740178417 |
| ➤ Waiter | : 0777111831 |
| ➤ Kitchen Helper | : 0775527937 |
| ➤ தொழிளாளர்கள்(அப்பள தொழிற்சாலை) | : 0777741195 |
| ➤ மருந்தக உதவியாளர்கள் | : 0765826025 |
| ➤ Accounts Officer(Trainee) | : 0772741206 |
| ➤ Store Keeper(Male) | : 0777110075 |
| ➤ Fashion Model | : 0770280224 |
| ➤ பெண் உதவியாளர்கள் | : 0766397826 |
| ➤ Sales Manager(Basic 90,000) | : 0779969661 |

வேலைவாய்ப்பு வட்சப் குரூப்பில் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewaswep.com
வேலையாட்கள் தேவையா : 076 098 4532
DEWMAS, 51, Amman Road, Nallur (4888)

DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2027
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
நாளை ஆரம்பம் :
26.07.2025 காலை 8.00 மணி (சனி)
நிர்வாகம் : 077 778 9815 (C-3502)


## மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 05 - 1961



மறைவு 23 - 07 - 2025

### செல்லையா சிவனேசன்

காஞ்சிபுரம் மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவனேசன் அவர்கள் கடந்த (23.07.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் சர்வேஸ்வரியின் அன்புக் கனவரும் காலம்சென்றவர்களான தவமணிதேவி, கனேசலிங்கம், சத்தியசீலன் மற்றும் வள்ளிமலர், சற்குணலீலா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாஸ்கரன் (பிரான்ஸ்), தீபா (பிரான்ஸ்), கஜானா (பிரான்ஸ்), கஜனி (முல்லைத்தீவு கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பாடசாலை - ஆசிரியை), மயூரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ரதி(பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), துவாரகன் (பிரான்ஸ்), முகுந்தன் (ஆசிரியர் - யா/வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரன், கணேஸ்வரன், சற்குணம் மற்றும் தங்கராசா, சண்முகநாதன், பவளசேனன், சிவராசா, தவமலர், கடம்பமலர், சாந்தினி, மோகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜமீறா, கபித்திரா, சிவதீபன், அஞ்சனா, கர்ணி, சிவானி, ஒவியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2025) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காஞ்சிபுரம்,
மாதகல். (C-3500)

தகவல் : குடும்பத்தினர்
முகுந்தன் (மருமகன்)- 077 819 9385


போட்டிப் பரீட்சை நேரடி வகுப்புக்கள்
வளவாளர்கள் : T.தவசேகர், P.கமலதாசன்
MSO, BOC, SLTS,SM
மன்னார் - IDM பிரதி சனி (26.07)(9.00 a.m - 2.00p.m)
யாழ்ப்பாணத்தில் யாழ்.நகர் (ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்) பிரதி ஞாயிறு (27.07) (9.00 a.m - 2.30p.m)
வவுனியா, கிளிநொச்சி மீசாலையிலும் இவ் வகுப்புக்கள்நடைபெறுகின்றன
மேலதிக விபரங்களுக்கு (C-3503)
076 688 3394, 077 526 5344

புதிய பிரிவுகள் ஆரம்பம்
26.07.2025
தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat (SriLanka)
(AA1, AA2, AA3)
Qualification:- G.C.E O/L 6 Passes (Medium - Tamil & English)
✧ A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களில் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II
Qualification:- G.C.E A/L 3 Passes(Medium - Tamil & English)
Further Details:- Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382
0774405917 (C-3486)

வீடு வாடகைக்கு உண்டு
யாழ்.நகரப் பகுதி இராசாவின் தோட்ட வீதியில் இரண்டு குடும்பங்கள் வசிக்கத்தக்க மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(தரகர்கள் தேவையில்லை)
074 132 0957 (4887)

விற்பனைக்கு
குதிரை போட் 25 H.P Susiki
32 Pcs சூடை வலை முற்றிலும் புதியவை (தயார் நிலையில்)
சிறு கழிவுடன் விற்பனைக்கு (4835)
077 357 3055
வல்வெட்டித்துறை

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1400/- France 11Kg - 2200/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- Australia 11Kg - 2130/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org